## போபால் விஷ வாயு கசிவு வழக்கு

# ஆண்டர்சனுக்கு ஜாமீன் வழங்க நெருக்குதல்

### போபால் முன்னாள் ஆட்சியர்

**போபால், ஜூன் 9:** யூனியன் கார்பைடு நிறுவனத்தின் முன்னாள் தலைவர் வாரன் ஆண்டர்சனுக்கு ஜாமீன் வழங்க அப்போதைய மாநில தலைமைச் செயலர் நெருக்குதல் அளித்ததாக போபால் முன்னாள் ஆட்சியர் மோதி சிங் தெரிவித்தார்.

போபாலில் புதன்கிழமை அவர் கூறியதாவது:

போபால் விஷவாயு சம்பவத்தைத் தொடர்ந்து வாரன் ஆண்டர்சனும், அவரது குழுவினரும் மும்பையிலிருந்து விமானம் மூலம் போபால் வந்தனர். அங்கிருந்து, யூனியன் கார்பைடு நிறுவனத்தின் விருந்தினர் மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்ட அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

1984 டிசம்பர் 7 பிற்பகல் 2 மணி அளவில், அப்போதைய மாநில தலைமைச் செயலர், தொலைபேசியில் என்னையும், மாவட்ட காவல் கண்காணிப்பாளரையும் தொடர்பு கொண்டு ஆண்டர்சனை விடுவித்து அவர் வந்த விமானம் மூலம் தில்லிக்கு அனுப்பி வைக்குமாறு கூறினார்.

இதையடுத்து, ஆண்டர்சனுக்கு ஜாமீன் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டோம். யூனியன் கார்பைடு நிறுவன ஊழியர், அவருக்கு உத்தரவாத ஜாமீன் அளித்தார். அதன்பேரில், ஆண்டர்சன் விடுவிக்கப்பட்டு விமானம் மூலம் தில்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டார் என்றார்.

# அரசு தலையிடவில்லை

### சிபிஐ முன்னாள் இயக்குநர் தகவல்

**ஹைதராபாத், ஜூன் 9:** போபால் விஷ வாயு கசிவு வழக்கில் மத்திய அரசு எந்தவிதமான நெருக்குதலையும் அளிக்கவில்லை என மத்திய புலனாய்வுத் துறை (சிபிஐ) முன்னாள் இயக்குநர் கே.விஜய ராமா ராவ் கூறினார்.

யூனியன் கார்பைடு நிறுவனத்தின் தலைமை நிர்வாகியாக இருந்த வாரன் ஆண்டர்சனை இந்தியாவுக்கு கொண்டு வருவதில் ஆர்வம் காட்ட வேண்டாம் என வெளியுறவுத் துறை அதிகாரிகள் சிலர் தன்னை வற்புறுத்தியதாக சிபிஐ முன்னாள் இணை இயக்குநர் பி.ஆர்.லால் செவ்வாய்க்கிழமை அளித்த பேட்டியில் கூறியிருந்தார்.

இது தொடர்பாக கே.விஜய ராமா ராவ் புதன்கிழமை கூறியதாவது:

இந்த வழக்கின் எந்த காலகட்டத்திலும் மத்திய அரசு எந்த நெருக்குதலையும் சிபிஐ-க்கு தரவில்லை.

வாரன் ஆண்டர்சனை இந்தியாவுக்கு கொண்டு வர அனைத்து முயற்சிகளையும் சிபிஐ-யும், மத்திய அரசும் மேற்கொண்டன.

ஆனால், யூனியன் கார்பைடு நிறுவனம் செயல்படுவதில் ஆண்டர்சனுக்கு நேரடித் தொடர்பு இல்லை எனக் கூறி அவரை இந்தியாவுக்கு நாடு கடத்த அமெரிக்கா மறுத்தது.

ஆண்டர்சனை இந்தியாவுக்கு கொண்டு வரும் முயற்சியை இப்போது வரை அரசோ, சிபிஐ அமைப்போ கைவிடவில்லை. இந்தியாவுக்கு அவரை நாடு கடத்துவதில் அமெரிக்காவுக்கு ஆர்வம் இல்லை என்பதுதான் உண்மை என்றார் அவர்.